**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** | INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8011834

C

1. District மாவட்டம் : Madurai | PS: காவல்நிலையம் V & AC | Year: ஆண்டு 2020 | FIR No.: மு.த.அ. எண் 6/2020 | Date: நாள் 18.10.2020

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 102 Copc

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: r/w 7 of PC (Amendment)

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: Act 2018.

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 16.10.2020 | Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 18.30 hrs | Time to : நேரம் வரை 22.00 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.10.2020 | Time : நேரம் 17.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.10.2020 | Time : நேரம் 17.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 1 km South East

   Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி Office of the District Social Welfare Officer, Plot No: 35, East 2nd Cross Street, K.K. Nagar, Madurai.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. R. Thirumalai | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Ramakrishnan

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Dy. Inspection Cell officer | (g) Address : முகவரி Office of the District Inspection Cell officer, Madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) Tmt. G. Santhi, District Social Welfare Officer.
   2) Tmt. M. Vasuki, Supdt.
   3) Tmt. M. Thangam, Rural Welfare Officer, East Union.
   4) Tr. Balakrishnan, Asst. A2 Seat.
   5) Tr. T. Raja, Asst. A1 Seat
   6) Tr. Navin, Junior Asst A3
   7) Tr. M. Chandrasekar, Driver.
   8) Tmt. S. Mahalakshmi, Ext. Officer, Melur.
   9) Tr. Palanisamy, Office Asst, District Social Welfare Office, Madurai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   This case was Registered after getting Instruction from the Superior Officer, Hence delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet with typed matter in Tamil from Page No. 3 to 7 are enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed T. Suriyakala Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS V4 AC, Madurai on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............ பதவி ............ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 18/10/20 [signature] 18/10/20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.10.2020 at 18.30 hrs.

Name: பெயர் T. Suriyakala
Rank: நிலை Inspector of Police No. எண் .........
V4 AC, Madurai
(18.10.2020)

Submitted,

இன்று 18.10.2020-ம் தேதி 17.00 மணிக்கு, காவல் ஆய்வாளர் த.சூரியகலா ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. இரா.திருமலை என்பவர் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய என்னிடம் புகார் மனு ஒன்றை அளித்தார். அந்த புகார் மனுவை பார்வையிட்டு, மதுரை ஊ.த.க. பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி புகார் மனு மற்றும் அத்துடன் ஒப்படைத்த திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 16.10.2020, மதுரை மாவட்ட சமூகநல அலுவலர் அலுவலகத்தின் வளாகத்தில் அனாமத்தாக கிடந்த கைப்பற்றபட்ட பணம் ரூ.23,430/- மற்றும் விளக்கம் அளிக்க முடியாத மாவட்ட சமூக நலத்துறை அலுவலக கண்காணிப்பாளர் திருமதி. M.வாசுகி அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ரூ.4,000/- மற்றும் திருமதி. மா.தங்கம், மகளிர் ஊர்நல அலுவலர் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ரூ.4,500 ஆக மொத்தம் ரூ. 31,930/- பணம் மற்றும் சம்பவ இடத்தில் அளித்த வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். புகார் மனுவில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர்: இரா. திருமலை, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க. எண்.ஜ1/314/2020, நாள்: 18.10.2020. அய்யா, பொருள்: திடீர் இணை ஆய்வு - மதுரை மாவட்டம் - சமூகநலத்துறை - மாவட்ட சமூக நல அலுவலகத்தில் அரசு தரும் நிதியுதவிகளை பெறும் பயனாளிகளுக்கு தடையில்லாச்சான்று வழங்க வந்த முக்கிய சேவகிகள்/ சமூக விரிவாக்க அலுவலர்களிடமும் மற்றும் பயனாளிகளிடமிருந்தும் லஞ்சம் பெறுவதாகக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் படி திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.31,930/- பணம் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது - தனி அறிக்கை அனுப்புதல் தொடர்பாக. கடந்த 16.10.2020-ம் தேதியன்று, மதுரை, கே.கே.நகர், கிழக்கு 2 வது குறுக்குத் தெரு, பிளாட். எண். 35-ல் உள்ள மாவட்ட சமூக நல அலுவலகத்தில் டாக்டர். அம்பேத்கார் பவுண்டேசன் மூலம் வழங்கப்படும் கலப்பு திருமண நிதியுதவி திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறும் பயனாளிகளுக்கு தடையில்லாச்சான்று வழங்க வந்த முக்கிய சேவகிகள்/ சமூக விரிவாக்க அலுவலர்களிடமும் மற்றும் சமூகநலத்துறையின் கீழ் விதவைகளுக்கு/ ஆதரவற்றவர் களுக்கு / உடல்

ஊனமுற்றவர்களுக்கு/ ஏழைகளுக்கு வழங்கப்படும் இலவச தையல் இயந்திரம் பெறுவதற்காக விண்ணப்பம் வழங்கும் பயனாளிகளிடமிருந்தும் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் வைத்து லஞ்சம் பெறுவதாகக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில், நானும், மதுரை ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.த.சூரியகலா மற்றும் போலீஸ் பார்ட்டியினரும் இணைந்து கடந்த 16.10.2020-ஆம் தேதி மாலை சுமார் 15.00 மணி முதல் மேற்படி முகவரியில் உள்ள மதுரை மாவட்ட சமூக நலத்துறை அலுவலகத்தை தொடர்ந்து கண்காணித்த போது, மேற்படி அலுவலகத்திற்கு உள்ளே பலரும் சென்று வந்து கொண்டிருந்தார்கள். மேற்படி நபர்களிடம் இரகசிய தகவலர் மூலம் விசாரித்த போது, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. G. சாந்தி மற்றும் கண்காணிப்பாளர் திருமதி. M.வாசுகி ஆகியோர்கள் மேற்படி அலுவலகத்தில் பணியாற்றி வருவதாகவும், தற்போது உள்ளே இருப்பதாகவும் தெரிவித்தார்கள். தொடர்ந்து அந்த அலுவலகத்தை கண்காணித்து, இரவு சுமார் 18.30 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் உள்ளே நுழைந்து மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.G.சாந்தி மற்றும் கண்காணிப்பாளர் திருமதி.M.வாசுகி ஆகியவர்களிடம் என்னையும் மற்றும் மதுரை ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.த.சூரியகலா அவர்களையும் அறிமுகம் செய்து கொண்டு மாவட்ட சமூக நல அலுவலகத்தை சோதனையிட்ட போது திருமதி. சாந்தி அவர்களின் அறையை சோதனை செய்த பின்னர், அவரது கைப்பையில் இருந்து ரூ.500/- ஆஜர் செய்து மேற்படி பணம் தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக கூறியதின்பேரில் அந்தப் பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அலுவலக கண்காணிப்பாளர் திருமதி. M.வாசுகி அவர்களின் இருக்கை மற்றும் கைப்பையை சோதனை செய்த போது தனது கைப்பையில் இருந்து ரூ.4,500/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவரிடம் அந்தப் பணம் குறித்து நான் விளக்கம் கேட்டபோது ரூ.500 தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாகவும், ரூ.4,000/- குறித்து அவர் அளித்த விளக்கம் ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லாததால் ரூ.4,000/- கைப்பற்றப்பட்டது. செலவிற்காக வைத்திருந்த ரூ.500/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப் பட்டது. பின்னர் மேற்படி கண்காணிப்பாளர் இருக்கைக்கு கிழக்கே இருந்த ஏ-3 இருக்கை அலுவலர் திரு.நவின், இளநிலை உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது அவர் தன்னிடம் இருந்து ரூ.100/-ஐ ஆஜர் செய்து, தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதின் பேரில் அந்தப்பணம் அவரிடம் திரும்ப

ஒப்படைக்கப்பட்டது. பின்னர், கண்காணிப்பாளர் அறைக்கு தெற்கே உள்ள அறையில் மேற்கே உள்ள குடும்ப வன்முறை தடுப்பு அலுவலர் அறைக்கு எதிரே ஏ-2 இருக்கை அலுவலர் திரு.ப.பாலகிருஷ்ணன், உதவியாளர்/கணக்கர் என்பவரை சோதனை செய்த போது அவரிடம் பணம் எதுவும் இல்லை. மேற்படி அலுவலகத்தின் நுழைவு வாயிலின் மேற்கு திசையில் இருந்த உதவியாளர் அறையில் அமர்ந்திருந்த உதவியாளர் திரு.தெ.ராஜா என்பவரை சோதனை செய்தபோது ரூ.200/-ஐ ஆஜர் செய்து, தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதின் பேரில் அந்தப்பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. உதவியாளர் அறையில் இருந்த திரு.ச.பழனியாண்டி, அலுவலக உதவியாளரை சோதனை செய்தபோது ரூ.790/-ஐ ஆஜர் செய்து, தனது சொந்த செலவிற்காகவும், சுகர் மாத்திரை வாங்குவதற்கு வைத்திருப்பதாகவும் சொன்னதின் பேரில் அந்தப் பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. உதவியாளர் அறைக்கு எதிர்புறம் இருந்த வழிகாட்டி அலுவலர் அறை ஆகிய இடங்களில் சோதனை செய்தபோது பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும், அலுவலக போர்டிகோவில் அமர்ந்திருந்த திருமதி. மா.துங்கம், மகளிர் ஊர்நல அலுவலர், அவர்களை விசாரணை செய்தபோது அவர் தன்னிடம் இருந்த பணத்தை கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை நான் வாங்கி எண்ணிப் பார்த்தபோது அதில் ரூ.4,720 இருந்தது. அந்த பணம் குறித்து விளக்கம் கேட்டபோது ரூ.220/ தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாகவும், ரூ.4,500/- குறித்து சரியான விளக்கம் அளிக்காததால் மேற்படி பணம் ரூ.4,500/- கைப்பற்றப்பட்டது. அவரது சொந்தப்பணம் ரூ.220/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் திருமதி.ச.மகாலட்சுமி, விரிவாக்க அலுவலர் அவர்கள் ஆஜர் செய்த ரூ.2,320/- மற்றும் மேற்படி அலுவலக ஓட்டுநர் திரு. சந்திரசேகர் வைத்திருந்த சொந்த பணம் ரூ.5,180/-ஆகியோர்களிடம் விசாரித்தபோது மேற்படி பணத்திற்கு சரியான விளக்கம் அளித்ததால் அந்த பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அலுவலகத்தை சுற்றுச்சுவருக்குள் சோதனை செய்தபோது மேற்படி அலுவலகத்திற்கு வெளியே கிழக்குப் பக்கம் அலுவலக சுற்றுச்சுவருக்குட்பட்ட பகுதியில் இரண்டு கத்தைகளாக பணம் கிடந்தது. அந்த பணத்தில் ஒரு கத்தையை நான் எடுத்து எண்ணிப் பார்த்தபோது அதில் ரூ.11,900/- இருந்தது. மற்றொரு கத்தையை எடுத்து எண்ணிப் பார்த்தபோது ரூ.11,530/- இருந்தது. மேற்படி மொத்தப்பணம் ரூ.23,430/- கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம் குறித்து திருமதி. சாந்தி மற்றும் திருமதி.M.வாசுகி ஆகியோர்களிடம் கேட்டபோது அது பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்று

தெரிவித்தார்கள். அலுவலகத்தில் இருந்த மற்ற அலுவலர்களிடமும் மேற்படி பணம் குறித்து கேட்டபோது அவர்களும் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார்கள். மேற்படி சோதனையின்போது, திருமதி.M.வாசுகி, திருமதி. தங்கம் மற்றும் அனாமத்தாக கிடந்த பணம் மொத்தம் ரூ.31,930/- கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி அலுவலகத்திலிருந்து அலுவலக கண்காணிப்பாளர் திருமதி.வாசுகி அவர்கள் ஆஜர் செய்த (1) மதுரை மாவட்ட சமூக நல அலுவலகம் அலுவலக பணியாளர்கள் வருகைப்பதிவேடு 2020 (பக்கம் 1 முதல் 15) (2) மதுரை மாவட்ட சமூக நல அலுவலகம் ஓட்டுநர் வருகைப்பதிவேடு 2020 (பக்கம் 1 முதல் 15) (3)மதுரை மாவட்ட சமூக நல அலுவலகம் வெளிநபர்கள் வருகைப்பதிவேடு (பக்கம் 1 முதல் 90) (4) மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் 15.10.2020 ம் தேதி ஆதிதிராவிட நலத்துறை சார்பில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கார் அறக்கட்டளை மூலம் கலப்பு திருமண நிதியுதவி வேண்டி விண்ணப்பித்த தம்பதியினர் குறித்த நிலுவை கோப்பு விவரம் (பக்கம் 1 முதல் 18) மற்றும் (5) மதுரை மாவட்ட சமூக நல அலுவலகம் 16.10.2020 அன்று தையல் இயந்திரத்தின் பாகஙகள் பெற்றுக் கொண்டவர்கள் பட்டியல் (பக்கம் 1 முதல் 2 ) ஆகியவை மேல்விசாரணைக்காக நான் கைப்பற்றினேன். மேற்படி ரூ. 31,930/- மேற்படி ஐந்து ஆவணங்கள் மற்றும் சம்பவ இடத்தில் இருந்த திருமதி. சாந்தி, மாவட்ட சமூக நல அலுவலர், திருமதி. வாசுகி, கண்காணிப்பாளர், திருமதி தங்கம், மகளிர் ஊர்நல அலுவலர், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், திரு.சந்திரசேகர் ஓட்டுநர் மற்றும் திருமதி. மகாலட்சுமி, மகளிர் ஊர்நல அலுவலர் ஆகியோர்கள் அளித்த வாக்குமூலம் ஆகியவற்றை இணைத்து, 1) திருமதி. G. சாந்தி, மாவட்ட சமூக நல அலுவலர், 2) திருமதி. M.வாசுகி, கண்காணிப்பாளர், 3)திருமதி.M.தங்கம், மகளிர் ஊர்நல அலுவலர், 4)திரு.P.பாலகிருஷ்ணன், உதவியாளர் ஏ-2 இருக்கை, 5) திரு. T. ராஜா உதவியாளர் ஏ-1 இருக்கை, 6) திரு. I.நவீன், இளநிலை உதவியாளர் ஏ-3 இருக்கை, 7) திரு. M.சந்திரசேகர், ஓட்டுநர், 8) திருமதி. S.மகாலட்சுமி, மகளிர் ஊர்நல அலுவலர், மேலூர், 9)திரு.S.பழனியாண்டி, அலுவலக உதவியாளர் ஆகியோர் மீது மேல் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தங்களுக்கு அனுப்பியுள்ளேன். ஒப்பம்/- XXXXX 18/10/20 (இரா. திருமலை) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1. திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள் 16.10.2020, 2. பதிவு செய்யப்பட்ட ஐந்து வாக்குமூலங்கள், 3.கைப்பற்றப்பட்ட ஐந்து ஆவணங்கள், 4. ரொக்கத் தொகை ரூ.31,930/-.

Sir, Received this report today (18.10.2020) at 17.00 hrs along with Joint Surprise Check Proceedings, Dated:16.10.2020, Cash Rs.31,930/- and Five statements of officials and seized Five documents. After obtaining permission from the Superior Officers, registered a case in Madurai V&AC Crime No.6/2020 u/s 102 Cr.PC r/w 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 18.10.2020 at 17.45 hrs. ஒப்பம்/- XXXXX (T.Suriyakala), Inspr, V&AC, 18/10/2020.

The original FIR along with report of Tr. R. Thirumalai, Joint Surprise Check Proceedings Dated: 16.10.2020 and 5 statements of officials are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under PC Act, Madurai and other copies were sent to the officers concerned.

18.10.2020
(T. Suriyakala)
Inspr. of Police
V&AC, Madurai